# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

.....

XXIII Additional Sessions Court, City Civil Court, Chennai 104

Calendar ..
Miscellaneous ..

S.C.39/2021

Sessions ..

Deposition of witness for Prosecution/ PW1
Defence
Court

Name .. திரு. காசி
Father Name .. திரு. சக்திவேல்
Village ..
Taluk ..
Caste ..
Calling .. அறைவர்
Religion ..
Age .. 26

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 29th days of march 2022 .

---

**முதல் விசாரணை**

நான் தற்போது ராயபுரம் ஆடு தொட்டி மெய்ன்ரோட்டில் குடியிருக்கிறேன். ஆம்புலன்ஸ் டிரைவராக வேலை செய்கிறேன். 2018 ம் வருடம் 5 ம் மாதம் ஒரு நாள் காலை 7.00 மணிக்கு ஆம்புலன்ஸ்சை சுத்தம் செய்து எடுத்துவரச்சென்ற போது ஒரு நபர் கீழே விழுந்து கிடந்தார். மெடிக்கல் காலேஜ் சப்வே அருகில் விழுந்து கிடந்தார். அவர் புளூ கலர் சிறும் பச்சை நிற சட்டை அனிந்து இருந்தார். கால் கட்டை விரல் இல்லை. 30 வயதுக்குள் இருக்கும். நான் காயங்களை பார்க்கவில்லை. நான் குடி காரர் யாரோ விழுந்து கிடக்கிறார் என்று நினைத்தேன். போலிசுக்கு போன் செய்து சொன்னேன். பின் நான் வண்டியை எடுத்து சென்று விட்டேன். பிறகு கொஞ்ச நேரத்தில் போலிஸார் டெத் என கூறி ஆம்புலன்ஸை எடுத்துவர சொன்னார்கள். என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையது. அது அ.த.சா.ஆ.1. அதில் உள்ள விவரங்களை நான் கூறவில்லை. போலிஸார் விசாரிக்கவில்லை.

(சாட்சியை பகுதியாக பிறழ் சாட்சியாக அனுமதிக்க கோரி, அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பின் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.)

KASI

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை:**

போலிஸார் என்னை விசாரித்தார்கள் என்றும் அந்த விசாரணையில் நான் மேற்சொன்ன விவரங்களை கூறி புகார் கொடுத்துவிட்டும், கீழே விழுந்து கிடந்த நபரை நான் செக் செய்து பார்த்தேன் என்றும் அவர் இறந்துவிட்டார் என்று உறுதி செய்து போலிசுக்கு தகவல் கொடுத்தேன் என்றும், அந்த நபருக்கு வலது கால் முட்டியில் பக்கவாட்டில் கிழிந்து இருந்ததை பார்த்தேன் என்றும் யாரோ அவரை வண்டியில் வந்து அந்த இடத்தில் போட்டதுபோல் தோன்றுகிறது என்றும் கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. தற்போது பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரிகள் 1 மற்றும் 3 க்கான குறுக்கு விசாரணை:

நான் இறந்த நபரின் உடலை எடுத்துச்சென்று மார்ச் வரியில் வைத்ததற்காகவும், ஆதாரத்திற்காகவும் வெள்ளை பேப்பரில் கையொப்பம் வாங்கினார்கள் என்றால் சரிதான்.

எதிரி 2 க்கான குறுக்கு விசாரணை:

இறந்த நபர் எப்படி இறந்தார் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

4 வது எதிரிக்கான குறுக்கு விசாரணை:

சம்பவ இடம் மிகுந்த போக்குவரத்து நெரிசல் உள்ள இடம் என்றால் சரிதான். போலிஸார் வந்தபிறகுதான் என்னை போனில் அழைத்து இறந்த நபரை எடுத்துச்செல்ல கூறினார்கள். அ.த.சா.ஆ.1ல் உள்ள விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

KASI

Taken down before me in open court read over to the witness and acknowledged by him/her to be correct.

22/3/22

Date..................XXIII Addl Judge.

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

.....

XXIII Additional Sessions Court, City Civil Court, Chennai 104

Calendar ..
Miscellaneous ..

S.C.39/2021

Sessions ..

Deposition of witness for Prosecution/ PW2
Defence
Court

Name .. திரு. கார்த்திக்
Father Name .. திரு.
Village ..
Taluk ..
Caste ..
Calling .. டிரைவர்
Religion ..
Age .. 28

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 29th days of march 2022.

---

**முதல் விசாரணை**

நான் தற்போது திருவற்றியூரில் ஒல்டைச் ரோட்டில் குடியிருக்கிறேன். ஆம்புலன்ஸ் டிரைவராக உள்ளேன். அ.சா.1 என் தம்பி. இறந்த சடலங்களை தூக்கிச்செல்லும் வேலையை செய்வேன். 2018 ம் வருடம் சப்வேக்கு அருகில் கிடந்த சடலத்தை தூக்கினேன். அது வலது புறம் கிடந்தது. சடலம் எப்படி இருந்தது என்று ஞாபகம் இல்லை. புளூ கலர் போட்டு இருந்ததாக ஞாபகம் உள்ளது. அந்த சடலத்துக்கு வயது 29, 30 இருக்கும். சடலத்தில் காயம் இருந்ததாக பார்க்கவில்லை. இது சம்பந்தமாக போலிஸார் விசாரித்தார்கள். கையொப்பம் வாங்கினார்கள்.

2 ம் எதிரிக்கான குறுக்கு விசாரணை.

போலிஸார் கையொப்பம் வாங்கிய பேப்பரில் என்ன எழுதி இருந்தது என்று தெரியாது. நான் படிக்கவும் இல்லை.

கார்த்திக்

4 ம் எதிரிக்கான குறுக்கு விசாரணை.

அ.சா.1 எனது தம்பி. தம்பி ஆம்புலன்ஸ் ஓட்டுவான். நான் இறந்த சடலங்களை தூக்கி வைப்பேன். போலிஸார் இறந்த சடலத்தை பார்த்ததற்காக கையொப்பம் வாங்கினார்கள். மார்ச் அறையில் வைத்தற்காக வாங்கவில்லை. இறந்த நபர் எப்படி இறந்தார் என்ற விவரம் தெரியாது.

கார்த்திக்

Taken down before me in open court read
over to the witness and acknowledged
by him/her to be correct.

Date……………….XXIII Addl Judge.
29/3/22

5

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

.....

XXIII Additional Sessions Court, City Civil Court, Chennai 104

Calendar ..
Miscellaneous ..

S.C.39/2021

Sessions ..

Deposition of witness for Prosecution/ PW3
Defence
Court

Name .. திரு. ஜீவா
Father Name .. திரு.
Village ..
Taluk ..
Caste ..
Calling .. டிரைவர்
Religion ..
Age .. 45

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 29th days of march 2022.

---

முதல் விசாரணை

நான் தற்போது கொருக்குப்பேட்டையில் பாரதி நகரில் குடியிருக்கிறேன். மெட்ரோ வாட்டர் லாரியில் டிரைவராக உள்ளேன். 2018 ம் வருடம் தேதி மாதம் ஞாபகம் இல்லை. நான் டீ சாப்பிட வந்தபோது கூட்டமாக இரயில்வே சப்பே அருகில் இருந்தது. போலிஸ் இருந்தார்கள். அந்த இடத்தில் மாதிரி படம் வரைந்தார்கள். நான் கையொப்பம் செய்தேன். பார்வை மகஜரில் 2 வதாக உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அந்த பார்வை மகஜர் அ.த.சா.ஆ.2 ஆகும். டீ குடிக்க போன நேரம் ஞாபகம் இல்லை. போலிஸார் என்னை விசாரிக்கவில்லை.

(சாட்சியை பகுதியாக பிறழ் சாட்சியாக அனுமதிக்க கோரி, அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பின் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.)

அரசு தரப்பு குறுக்கு விசாரணை.

போலிஸார் என்னை விசாரித்தார்கள் என்றும் அந்த விசாரணையில் சம்பவ இடத்தில் 30 வயது மதிக்கத்தக்க ஆண் சடலம் இருந்ததை பார்த்ததாக கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

M. Jeeva

2 ம் எதிரிக்கான குறுக்கு விசாரணை.

சம்பவ இடத்தில் வரையப்பட்ட வரைபடம் எதற்காக போலிஸார் வரைகிறார்கள் என்று என்னிடம் சொல்லவில்லை. நான் கையொப்பம் போட்டபோது எதற்காக என்னிடம் கையொப்பம் வாங்குகிறார்கள் என்று போலிஸார் என்னிடம் எந்த விவரத்தையும் கூறவில்லை.

4 ம் எதிரிக்கான குறுக்கு விசாரணை.

நான் கையொப்பம் போட்ட பேப்பரில் என்ன எழுதி இருக்கிறது என்ற விவரம் தெரியாது. என் வீட்டிற்கும் சம்பவ இடத்திற்கும் சுமார் 5 கி.மீ தூரம் உள்ளது. நான் காவல் நிலையத்தில் வைத்து கையொபம்பம் செய்தேன் என்றால் சரிதான்.

M Jeeva

Taken down before me in open court read
over to the witness and
acknowledged
by him/her to be correct.

Date..................XXIII Addl
Judge.